# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

04.09.2020 வெள்ளிக்கிழமை


## புதினம் தெரியுமோ?

கிழக்கு தொல்லியல் செயல ணிக்குப் பொருத்தமான ஆக்கள் ஒருத்தரும் இல்லை என்று தமிழ் அமைச்சர் ஒருத்தர் சொல்லியிருக் கிறாராம். ஜனாதிபதியிட்ட கதைச் சிருக்கிறம், தமிழ் பேசிற ஆக்களை போடப் போயினம் எண்டு எல் லாம் எலெக்சனுக்குக் கதைய ளந்த இவையள் இப்ப அப்படியே பல்டி அடிக்கினம் கண்டியளோ. கிழக்கு தொல்லியல் சின்னங் களைப் பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணிக்கு முழுக்க பெரும் பான்மையின ஆக்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கினம்.

2

# சர்வாதிகார பயணத்தின் ஆரம்பமே 20

பிரதான எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 4

சர்வாதிகார ஆட்சியை நோக்கி பயணிப் பதற்கான ஆரம்பமே அரசமைப்பின் 20ஆவது திருத்தம் என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி விமர்சித் துள்ளது. அரசமைப்புப் பேரவை இல்லாமல் செய்யப்பட்டதன் ஊடாக உயரிய சுயாதீன நிறுவனங்க ளுக்கு தமது விசுவாசிகளை நியமிக்கக்கூடிய வாய்ப்பு ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளது. இது பயங்கர நிலைமையா கும் என்று எதிர்க்கட்சி பிரதம கொற டாவான லக் ஷ்மன் கிரியல்ல சுட்டிக் காட்டினார்.

2



## பிரேமலாலுக்காக மேன்முறையீடு!

கொழும்பு, செப். 4

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவிற்கு நாடாளுமன்ற அமர்வுக ளில் பங்கேற்பதற்கு அனுமதிகோரி மேன் முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற

2

## நான்கு நீதிமன்றங்களுக்கு சிரேஷ்ட சட்டத்தரணிகள்!

கொழும்பு, செப். 4

நான்கு மேல் நீதிமன்றங்களுக்கு அரச சிரேஷ்ட சட்டத்தரணிகளை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள ஏராளமான வழக்கு களை கருத்தில்கொண்டு ஹோமாகம, களுத்துறை, மாத்தறை மற்றும் நீர்கொ ழும்பு மேல் நீதிமன்றங்களுக்கு அரச சிரேஷ்ட சட்டத்தரணிகளை நியமிக்க சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார். மேல் குறிப்பிட்ட ஒவ்வொரு மேல் நீதி மன்றங்களிலும் சுமார் 600க்கும் அதிக மான வழக்குகள் நிலுவையில் உள்ளன என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜயரட்ன தெரிவித் துள்ளார். (ம)

## போதைப்பாவனையை தடுக்க விமானப்படை களமிறக்கம்!

கொழும்பு, செப். 4

தெற்காசியப் பிராந்தியத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் படும் போதைப்பொருள் கடத்தல்கள் மற்றும் போதைப் பொருள் பாவனை என்பவற்றைத் தடுக்க இலங்கை விமானப்படை களமிறக்கப்பட்டுள்ளது. இலங்கை

2

## மின் தாக்கி ஐவர் காயம்

திருகோணமலை, செப். 4

திருகோணமலை சீனக்குடா விமானப் படை முகாமில் மின்சாரம் தாக்கிய நிலையில் ஐவர் திருகோணமலை பொதுமருத்துவமனையில் இன்று காலை சேர்க் கப்பட்டுள்ளனர். திருகோணமலை

2

## 13ஆவது திருத்தச்சட்டத்தால் ஆளுங்கட்சிக்குள் கடும் சமர்

கொழும்பு, செப். 4

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமை நீக்கப்பட வேண்டும் என மாகாணசபைகள் இரா ஜாங்க அமைச்சர் சரத்வீரசேகர முன்வைத்துள்ள கருத்துக்கு ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவின் மாகாணசபை உறுப்பினர்கள் ஒன்றியம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. அத்துடன், பழைய முறைப்படி மாகாணச

2

## பலமான ஆட்சிக்காகவே ஜனாதிபதிக்கு அதிகாரம்

வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



கொழும்பு, செப். 4

பலமான அரச நிர்வா கத்தை முன்னெடுக்கவே ஜனாதிப திக்கு முழுமையான நிறை வேற்று அதிகாரம் 20ஆவது திருத்தம் ஊடாக வழங்கப்பட்டுள்

2



## தங்கூசி வலைகள் கடத்தியவர் கைது

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாணத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் இரண்டு தொகுதி தங்கூசி வலைகளை கடத்திச் சென்ற நபர் மண்டைதீவில் வைத் துக் கைது செய்யப்பட் டார் என்று ஊர்காவற்

2

## 2018ஆம் ஆண்டு உயர்தரம் கல்விச்சாலைகளுக்கு மாணவரை பிரிப்பதற்கான வர்த்தமானி இன்று!

கொழும்பு, செப். 4

2018ஆம் ஆண்டு வெளியான உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கமைய இந்த வருடத்திற்காக தேசிய கல்வி கலாசா லைகளுக்கு மாணவர்களை உள்வாங்கு வது தொடர்பிலான வர்த்தமானி இன்று பிரசுரிக்கப்படவுள்ளது. கல்வியமைச்சு இதனை தெரிவித்

2


சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# சர்வாதிகார....

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு '20'ஆவது திருத்தச்சட்ட மூலத்தின் ஊடாக அரசமைப்புப் பேரவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமேல் மாகாண தேர்தலின்போது பொலிஸ் மற்றும் சில அரச சேவையாளர்கள் அரசாங்கத்துக்கு சார்பாக செயற்பட்டதால் அத்தேர்தல் முடிவடைந்த கையோடு நாட்டிலுள்ள உயர் நிறுவனங்களான நீதிமன்றம், பொலிஸ், அரசசேவை ஆகியன சுயாதீனமாக்கப்படவேண்டும் என்ற கருத்து உருவானது. இதனை அடிப்படையாகக்கொண்டே 2001ஆம் ஆண்டு 17ஆவது திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

சந்திரிக்கா அம்மையாரால் கொண்டுவரப்பட்ட 17ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வழங்கின. உயர் நிறுவனங்கள் சுயாதீனமாக்கப்படவேண்டும் என்பதே சட்டமூலத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. இதன்படி அரசமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டது.

குறிப்பாக உயர் நிறுவனங்களின் பதவிகளுக்கு நிறைவேற்று ஜனாதிபதியால் அனுப்படும் நபர்களின் பெயர்களைக்கூட நிராகரிக்கும் அதிகாரம் அப்பேரவைக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், 18ஆவது திருத்தச்சட்டம் மூலம் 17 இல்லாதொழிக்கப்பட்டு அனைத்து அதிகாரங்களும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின்கீழ் கொண்டுவரப்பட்டன. உயர் பதவிகளுக்கான நியமனங்களை ஜனாதிபதியே வழங்கினார்.

இந்நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் அல்லது இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தாடல் உருவானது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவோம் என உறுதியளித்தே நாம் தேர்தலை எதிர்கொண்டோம். 2015ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்ற பின்னர், நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதற்கு இணங்கினார். 99 சதவீத அதிகார குறைப்புடன் 19ஆவது திருத்தச்சட்டமூலம் உயர்நீதிமன்றத்துக்கு சென்றது. சில விடயங்களை மாற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என நீதிமன்றம் சட்டவியாக்கியானம் வழங்கியது. எனவே, சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாத விதத்தில் '19' மாற்றியமைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

அதன்மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அரசமைப்புப் பேரவை உருவாக்கப்பட்டது. சுயாதீன நிறுவனங்களுக்கு உறுப்பினர்களை ஜனாதிபதி தெரிவுசெய்தால் அதனை நிராகரிக்கும் அதிகாரம் பேரவைக்கு காணப்பட்டது. இதன்மூலம் நீதிமன்றம் உள்ளிட்ட நிறுவனங்கள் சுயாதீனமாக இயங்கின.

20ஆவது திருத்தச்சட்டமூலம் ஊடாக நாடாளுமன்ற பேரவை உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு உரிய அதிகாரங்கள் இல்லை. ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்க மட்டுமே முடியும். அதனை ஜனாதிபதி ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். எனவே, முப்படை தளபதிகள், நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் உட்பட சுயாதீன நிறுவனங்களுக்கான நியமனங்களை ஜனாதிபதியே வழங்குவார். இதனால் உயர் பதவிகளை வகிப்பவர்களுக்குச் சுயாதீனமாக செயற்படமுடியாத நிலை ஏற்படும். எவ்வாறு அரசாங்கத்துக்கு எதிராக தீர்மானங்களை வழங்குவது என்ற அச்சநிலையும் உருவாகும். உயர் நிறுவனங்கள் சுயாதீனமாக செயற்படாவிட்டால் நாட்டை முன்நோக்கி அழைத்துச்செல்ல முடியாது.

ஆக சர்வாதிகாரத்தை நோக்கிய பயணத்தின் ஆரம்பமே 20ஆவது திருத்தச்சட்ட மூலமாகும். நாடாளுமன்றத்தை ஒரு வருடத்துக்கு பிறகு ஜனாதிபதியால் கலைக்கமுடியும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் எவ்வாறு நிலையானதொரு ஆட்சியை எதிர்பார்க்கமுடியும்' என்றார். (ம44)

# பிரேமலாலுக்காக...

தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் நபரொருவரை சுட்டுக்கொன்றமைக்காக அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரேமலால் வெற்றிபெற்றிருந்தார். எனினும் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி என்பதால் அவர் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே பிரேமலால் மேன்முறையீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான முடிவு எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ம)

# மின் தாக்கி...

சீனக்குடா விமான படை முகாமில் நிகழ்வொன்று இடம்பெற உள்ளதாகவும் இந்த நிகழ்விற்கு அழகுபடுத்துவதற்காக ஏணியை எடுத்துச் சென்றபோது மின்சாரம் தாக்கியதாகவும், இதனையடுத்து ஐந்து விமான படைச் சிப்பாய்களையும் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்த்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது. சீனக்குடா விமானப் படை முகாமில் கடமையாற்றி வரும் தர்மேந்திரா (24 வயது), விக்ரமசிங்க (26 வயது), ரத்னசிறி (31 வயது), பிரதீப் குமார (31 வயது), திலகசிறி (39 வயது) ஆகியோரே அவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களாவர். (ம-இ)

# தங்கூசி வலைகள்....

றுறை பொலிஸார் தெரிவித்தனர். மண்டைதீவு பொலிஸ் காவலரணில் கடமையாற்றும் விவேகானந்தன் தலைமையிலான குழுவினரே இந்த நபரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் புங்குடுதீவு 9ஆம் வட்டார பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-25)

# பலமான...

ளது என்று தெரிவித்தார் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் அனைத்து இன மக்களின் அரசியல் அபிலாசைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஜனநாயக இடதுசாரிமுன்னணி சார்பில் அரசமைப்பு வரைபு தொடர்பான விசேட குழுவினரிடம் முன்வைத்துள்ளோம்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் முறையாக உருவாக்கப்பட்டுள்ளது. 19ஆவது திருத்தம் பலவீனமான அரச நிர்வாகத்துக்கு பிரதான காரணியாக அமைந்தது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் உள்ளிட்ட பலதரப்பட்ட விடயங்களுக்கு யார் பொறுப்பு கூற வேண்டும் என்ற முரண்பாடுகள் தற்போது தோற்றம் பெற்றுள்ளன. இவ்வாறான முரண்பாடுகள் 20ஆவது திருத்தத்தில் ஒருபோதும் ஏற்படாது.

முத்துறை அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளதால் அரச நிர்வாகம் பலமாக செயற்படும் என எதிர்பார்க்கிறோம். அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தை கடந்த அரசாங்கம் முறையற்ற விதமாகவே இரத்துச் செய்தது. திருத்தம் இரத்து செய்யப்பட்டு புதிய திருத்தம் கொண்டு வருவதற்கான காரணிகள் குறிப்பிடப்படவில்லை.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் ஒரு வாரத்தில் நிறைவேற்றப்படும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் வழங்கிய வாக்குறுதியின் காரணமாகவே 19ஆவது திருத்தம் நிறைவேற ஆதரவு வழங்கினோம். ஒரு வாரம் என்று காலக்கெடு விதித்தவர். 4 ஆண்டு காலம் கடந்தும் 20ஆவது திருத்தம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

நாட்டுக்கு பொருந்தும் விதத்திலான அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவருவோம் என இரண்டு பிரதான தேர்தல்கள் ஊடாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம். மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி 20ஆவது திருத்தம் ஊடாக நிறை வேற்றப்பட்டுள்ளது - என்றார். (ம-44)

# போதைப்பாவனையை...

உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் போதைப்பொருள் கடத்தல்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விமானப் படை தளபதி ஏர் மார்ஷல் சுமங்கலா டயஸின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அதன்படி, பகல்நேர மற்றும் இரவு நேரங்களில் மேற்கொள்ளப்படும் கண் காணிப்பு நடவ டிக்கைகளை விமானப்படை அதிகரித்துள்ளது. (ம)

# 13ஆவது திருத்தச்சட்டத்தால்...

பைத் தேர்தலை நடத்த வேண்டும் என நேற்று முன்தினம் நிறைவேற்றிய தீர்மானத்தை ஜனாதிபதி, பிரதமர், மாகாண சபைகள் அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைப்பதற்கும் மேற்படி ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் பொதுஜன பெரமுனவின் மாகாணசபைகள் ஒன்றியம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்துக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஆதரவு வழங்கியுள்ளது. வாசுதேவ நாணயக்கார போன்ற இடதுசாரி தலைவர்களும் 13 இற்காகவும், மாகாணசபை முறைமைக்காகவும் குரல் எழுப்பிவருகின்றனர். இதனால் ஆளுங்கட்சிக்குள் இவ்விவகாரம் தொடர்பில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கப்போவதில்லை என சரத்வீரசேகர அறிவித்துள்ளார். '13ஆவது திருத்தச்சட்டமானது இலங்கைக்கு பலவந்தமாக திணிக்கப்பட்டதொன்று, ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு கடும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே அது நிறைவேற்றப்பட்டு மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. இதனால் நாடு சமஷ்டி முறைக்கு தள்ளப்பட்டது. மாகாணசபை முறைமை தொடர்பில் ஆராயப்பட்டுவருகின்றது, அதனால் ஏற்படும் செலவுகள் உட்பட அனைத்து விடயங்களும் கருத்திற்கொண்டு கடந்தகால செயற்பாடுகளும் ஆராயப்பட்டு அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.' என்றார். அதேபோல் சரத்வீரசேகரவுக்கு ஆதரவாக கடும் போக்குடைய சிங்கள தேசிய வாத அமைப்புகளும், பௌத்த தேரர்களும் குரல் கொடுத்துவருகின்றனர். (ம-44)

# கல்விச்சாலைகளுக்கு...

துள்ளது. இதற்கான விண்ணப்பங்களை ஒன்லைன் முறைமையினால் மாத்திரம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கல்வியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தள பக்கமான www.moe.gov.lk க்கு பிரவேசித்து குறித்த விண்ணப்பங்களை பூர்த்தி செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பங்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் 011 27 87 303, 011 27 87 385 அல்லது 011 27 87 397 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (ம-இ)

## புதினம் தெரியுமோ

**தமிழ் பேசிற ஆக்கள் ஒருத்தரும் இல்லை. தமிழ் பேசுற ஆக்களை அந்தச் செயலணியில சேர்க்கோனும் என்டு பலரும் வலியுறுத்தியிருக்கினம். இந்த விசயங்களை அரசோட ஒட்டிக் கொண்டிருக்கிற தமிழ் அமைச்சர்மார் தானே சொல்லி செய்விக்கோனும். இது எவ்வளவு முக்கியமான விசயம், கிழக்கில எதிர்காலத்தில தமிழ் பேசுற மக்களோட இருப்போட சம்பந்தப்பட்ட விசயம். இந்த விசயங்களைக் கூடச் செய்யேலாட்டி பின்ன என்னத்துக்கு அரசோட இவையள் ஒட்டிக் கொண்டு இருக்கோனும்.**

**எலெக்சனுக்கு முன்னம் ஜனாதிபதியிட்ட சொல்லிட்டம், இந்த அவர் தமிழ் பேசுற ஆக்களைப் போடப் போறார், நாங்க சொன்னா அங்க எல்லாம் நடக்கும் என்டு பேசின அமைச்சர்தான், இப்ப டக்கென்டு அந்தச் செயலணிக்கு நியமிக்கிறதுக்குத் தமிழ் பேசும் மக்கள் சார்பில தகுதியானவர கண்டுபிடிக்கேலாம இருக்கு என்டு கதையளந்திருக்கிறார். தமிழ் பேசும் மக்கள் மத்தியில எவ்வளவோ புத்திஜீவிகள் இருக்கேக்க அந்த அமைச்சர் இப்பிடி பேசிறது சரியான பிழை கண்டியளே. அதுவும் அந்த செயலணியில போட்டிருக்கிற ஆக்கள விட பல மடங்கு மேலான ஆக்கள் தமிழ் பேசும் சமூகத்தில இருக்கினம். அந்தச் செயலணியில இருக்கிற சில தேரர்மார் பேசின விசயங்களை வச்சுத்தான் இதைச் சொல்லுறன் குறை நினைக்காதீங்கோ. அரசாங்கத்தில இவையளிண்ட பேச்சு எடுபடுதில்லை என்டத மறைக்க இங்க வந்து புதுப் புதுக் கதையா அவிட்டு விடினம். அரசாங்கம் கேக்குதில்லை என்டு எப்பிடி வெளியில சொல்லுறது. இன்னும் பல கதையள் வரும் கண்டியளே. ஆடத் தெரியாதவள் மேடை கோணல் என்டாளாம்.**

**- பட்சி**

# மீண்டும் டெங்கு அபாயம்

## டெங்கு ஒழிப்புப் பிரிவு எச்சரிக்கை



கொழும்பு, செப்.4

அண்மை நாட்களாக நாட்டில் பெய்து வரும் மழை காரண மாக டெங்கு நோய் பரவுவதற் கான அபாயம் மீண்டும் ஏற்பட்டுள்ளது என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்துள் ளார். இந்த வருடத்தின் இதுவரையான காலப்ப குதியில் 25 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர். இக்காலப்பகுதியினுள் 26 ஆயிரத்து 238 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே, பொதுமக்கள் தங்களது சுற்றா டலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (வ-இ)

# அனுமதியின்றி மணல் ஏற்றியோர் சிக்கினர்!

கிளிநொச்சி, செப்.4

அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் ரக வாகனங்கள் இரண்டும், உழவு இயந்திரங்கள் இரண்டும் கைப்பற்றப் பட்டுள்ளன என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட் டில் இரு டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டது டன், அவற்றின் சாரதிகளும் கைது செய்யப் பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் சாரதிகள் இருவரும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கிளாலி மற்றும் புலோப்பளையில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 3 உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்ட னர். அவர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டனர். சாரதிகள் 5 பேரையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுகின்றன என்று பளைப் பொலி ஸார் தெரிவித்தனர். (எ-6)



# ஓட்டோ விபத்தில் சாரதிகள் காயம்!

வவுனியா, செப்.4

வவுனியா, கொறவப்பொத்தானை வீதியில் இன்று காலை நடந்த விபத்தில் இருவர் காயம டைந்தனர். இரு முச்சக்கரவண்டிகள் சேதம டைந்தன. வவுனியா நகரில் இருந்து கோயில் குளம் நோக்கிப் பயணித்த இரு முச்சக்கர வண்டிகள் கொறவப்பொத்தானைப் பகுதியில் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முயன்றபோது விபத்துக்குள்ளாகின. விபத்துத் தொடர்பான விசாரணை களை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-110)

# மோட்டார் சைக்கிள் திருடியவர் கைது!

கிளிநொச்சி, செப்.4

இசை நிகழ்ச்சி ஒன்றில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் ஒலி பெருக் கிச் சாதனம் என்பன பளை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வண் ணாங்கேணி பகுதியில் உள்ள அம்மன் ஆலயத் திருவிழாவின் இறுதி நாளன்று இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்ட ஒருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்றும், ஒலிபெருக்கிச் சாதனம் ஒன்றும் திருடப்பட்டிருந்தன. மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டி ருந்த மோட்டார் சைக்கிளின் வயர்கள் கழற்றப்பட்டு மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்து.

இந்தச் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் பளை பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினர் திருடப்பட்ட பொருள்களை முல்லையடியில் மீட்டனர். இந்தச் சம்ப வம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் விசாரணையின் பின்னர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்ப டுத்தப்பட்டார். அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-6)

# வரணியில் வீதி சீரமைப்பு

கொடிகாமம், செப்.4

சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் வரணியில் வீதி ஒன்று தார் ஊற்றப்பட்டுச் செப்பனிடப்பட்டுள் ளது. வரணி, இயற்றாலையில் உள்ள வீரபத்திரர் வீதியே செப்பனிடப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் உறுப்பினர் சி.பிரபாக ரனுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முதற்கட் டமாக 5 லட்சம் ரூபா நிதிச் செலவில் இந்த வீதி செப்பனிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதி முன்னர் மக்கி வீதியாகக் காணப்பட்டதால், மழைகாலங்களில் பயன்படுத்த முடியாத நிலைமை இருந் தது. அந்தப் பகுதி மக்களின் வேண்டு கோளுக்கு இணங்க அந்த வீதி தற்போது செப்பனிடப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டது. (எ-159)



# கிராமியக் கைத்தொழில்களை மேம்படுத்த புதிய செயற்றிட்டம்

கொழும்பு, செப்.4

நாடளாவிய ரீதியில் கிராமியக் கைத்தொழில்களை மேம்படுத்த புதியதொரு அபிவிருத்தி செயற்திட் டத்தினை அரசாங்கம் முன்னெடுத் துள்ளது.

இதற்கான அங்கீகாரம் அமைச்சரவை யால் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, இரத்மலானை, களுத்துறை, மில்லாவ, நாலந்த, மாகந்துர, ஊவா பரணகம மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்க ளில் கைத்தொழில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அந்தந்தப் பிரதேசங்களின் கைத்தொ ழில் சேவை ஆணைக்குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இவை தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த செயற்திட்டத்திற்காக 9 முத லீட்டாளர்களிடம் இருந்து 35 வருட காலத்திற்கு வரி அடிப்படையில் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (வ-இ)



50 மில்லியன் பெறுமதியான

# கொரோனா பரிசோதனை கருவிகள் அன்பளிப்பு

கொழும்பு, செப்.4

கொகோகோலா நிறுவனமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து 16,800 பி.சி.ஆர். பரிசோதனை கருவி கள் மற்றும் 17 ஆயிரம் வி.ரி.எம் கருவிகளை அன்பளிப் புச் செய் துள்ளன. இவை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் அலரி மாளிகையில் வைத்து நேற்றுக் கையளிக்கப்பட் டன. 50 மில்லியன் ரூபா பெறுமதியான இக் கருவிகள் கொரோனாத் தொற்றாளர்களுக்குச் சிகிச்சையளிக்கும் 6 வைத் தியசாலைகளுக்கு வழங்கிவைக்கப்படவுள்ளன. (வ)

# மாகாண சபைத்தேர்தலுக்கு முன்னர் ஓய்வுபெறமாட்டேன்

## மகிந்த தேசப்பிரிய பிடிவாதம்



கொழும்பு, செப்.4

மாகாண சபைத்தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஓய்வுபெற்றுச் சென்றால் நல்லது என்று விமல் வீரவன்ச அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் குறிப்பிட்டிருந்தார். இந்தக் கருத்துக்கு மஹிந்த தேசப்பிரிய தற்போதைய சூழ்நிலையில் தான் ஓய்வுபெறமாட்டேன் என்று தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒரு மாதத்திற்கு முன்பே ஓய்வு பெறத் திட்டமிட்டிருந்தேன். ஆனால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் காரணமாக மாகாணசபைத் தேர்தல் முடியும் வரை ஒருபோதும் ஓய்வு பெறமாட்டேன் -என்றார். (ந,இ)

# எரிபொருள் தாங்கிகளை புனரமைக்க நடவடிக்கை

கொழும்பு, செப்.4

கொலன்னாவ எரிபொருள் களஞ்சியப்படுத்தல் தாங்கிகள் மூன்றை மீளப்புனரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான யோசனை மின்சக்தி வலு அமைச்சரால் முன்வைக்கப்பட்டதற்கு அமைய இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட மீள்நிர்மாணக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இந்தோ ஈஸ்ட் என்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் 942.47 மில்லியன் ரூபாவுக்கு இந்தப் புனரமைப்புக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. (வ-இ)



# முன்பள்ளிச் சிறாருக்கு கற்றல் உபகரணங்கள்

வவுனியா, செப்.4

வவுனியா, செட்டிக்குளத்தில் அமைந்துள்ள கலைவாணி முன்பள்ளிச் சிறார்களுக்குத் தமிழ் நிலம் அமைப்பின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் அனுசிகன் என்பரின் 17ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. தமிழ் நிலம் மக்கள் அமைப்பின் தலைவர் வி.விநோகரன் தலைமையில் இவை வழங்கப்பட்டன.

அதேவேளை, செட்டிக்குளம், சண்முகபுரம் கிராமத்தில் உள்ள குழந்தைகளுக்கு பால்மா பெட்டிகளும் வழங்கப்பட்டன. இத்தாலியில் வசிக்கும் சுகாகரன் யசிந்தா என்பவரின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இத்தாலி மனிதநேய சங்கத்தின் பொறுப்பாளர் ம.கிருபாகரனின் ஒழுங்கமைப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.(எ-110)

# மாகாணத் தேர்தலை நடத்துமாறு அழைப்பு

## இலங்கை மாகாண சபை உறுப்பினர் ஒன்றியம் தீர்மானம்

கொழும்பு, செப்.4

மாகாண சபைத்தேர்தலை விரைவில் நடத்தவேண்டும் என்ற தீர்மானத்தை இலங்கை மாகாணசபை உறுப்பினர்களின் ஒன்றியம் நிறைவேற்றியுள்ளது என இராஜாங்க அமைச்சர் காஞ்சனா ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபைகளை ஒழிக்கவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர கூறியமைக்கு கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றேன். மேலும், இராஜாங்க அமைச்சர் வெளியிட்ட அறிக்கை அவரது தனிப்பட்ட அறிக்கையாகும். அரசாங்கத்தின் கொள்கை அல்ல.

அந்தவகையில் அமைச்சர் சரத் வீரசேகர அறிக்கை குறித்து எங்களது அதிருப்தியை வெளிப்படுத்த ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் மாகாண சபை தேர்தல்களை நடத்துமாறு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (ந,இ)





# கப்பல் வெடிப்பு சம்பவம்: ஒருவர் பலி

கொழும்பு, செப்.4

தீப்பற்றி எரியும் "எம்டி நியூ டயமண்ட்" என்ற கப்பலில் ஏற்பட்ட வெடிப்பில் காணாமல் போயிருந்த ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதேவேளை, கப்பலில் ஏற்பட்டுள்ள தீப்பரவலை கட்டுப்படுத்தும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் கடற்படை மேலும் தெரிவித்துள்ளது. (ந,இ)

# துமிந்த வழக்கு மீள் விசாரணை?

## எம்.பி.பிரேமநாத் வேண்டுகோள்

கொழும்பு, செப்.4

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை தீர்ப்புத் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சீ தொலவத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாரத லக்ஷமன் பிரேமச்சந்திர சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனை தீர்ப்பு குறித்து அரசியல் சார்ந்த ஒரு ஆணைக்குழுவின் மூலம் மீண்டும் விசாரிக்க முடியும். துமிந்த சில்வாவுக்கு எதிரான தீர்ப்புடன் சம்பந்தப்பட்ட நீதிபதிகள் ரஞ்சன் ராமநாயக்கவுடன் உரையாடுவதை நாம் பார்த்தோம்.

இதனால் ஆணைக்குழு அல்லது அரசியல் ரீதியாக மீண்டும் விசாரணை நடத்தி திருத்தங்களைச் செய்ய முடியும். குற்றவாளி ஒருவர் சட்டத்தில் இருந்து தப்பிப்பதை விட குற்றவாளி அல்லாத ஒருவர் சட்டத்தில் சிக்கி தண்டனை அனுபவித்து வருவார் என்றால், அது மிகப் பெரிய பாவம். இந்த உரையாடல் வழக்கு தீர்ப்பில் பாதிப்புகளை ஏற்படுத்தியதா என்பது தொடர்பில் விசேட விசாரணை நடத்துவது பொருத்தமானது எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)



# 2230 கிலோகிராம் மஞ்சள் மீட்பு

கொழும்பு, செப்.4

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 2 ஆயிரத்து 230 கிலோகிராம் மஞ்சள் தொகை கடற்படையினரின் உதவியுடன் கைப்பற்றப்பட்டுள்ளது. பேருவளை கடற்கரையோர பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஆறு கோடி பெறுமதியான இந்த மஞ்சள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது. கடற்படையினரினால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் வழங்கிய தகவல்களின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இது கைப்பற்றப்பட்டுள்ளது என பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். இதன்போது பேருவளை கடற்கரையோர பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகு ஒன்றிலிருந்து 90 மஞ்சள் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து 1070 கிலோ கிராம் மஞ்சள் கட்டிகளும் , 1160 கிலோ கிராம் மஞ்சள் தூளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (வ-இ)

# தொழில் கிடைக்காத பட்டதாரிகள் 17வரை மேன்முறையீடு செய்யலாம்



## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.4

62,000 பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ், இதுவரை தொழில் கிடைக்காத பட்டதாரிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை மேன்முறையீடு செய்யமுடியும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பட்டதாரி அல்லது இதற்கு முன்னர் தொழில் ஒன்றிலிருந்து ஊழியர் சேமலாபநிதி நிதியத்தின் அங்கத்துவராக இருந்தால் மேற்படி தொழில்வாய்ப்பு கிடைக்காமல் போகும் என்று அதற்கான செயற்பாட்டு முறைமைகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், விண்ணப்பதாரிகள் தமது உண்மையான நிலையைக் குறிப்பிட்டு மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்க முடியும். சில பட்டதாரிகள் கடந்த காலங்களில் அவர்களுக்கு தொழில் இல்லாத நிலையில், ஏற்பட்ட பொருளாதார பின்னடைவைக் கருத்திற் கொண்டு தாம் பெற்றுக்கொண்ட பட்டத்திற்கு பொருத்தமற்ற சிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களென மேற்படி செயற்பாட்டு முறைமைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தமக்கு பொருத்தமில்லாத சம்பளத்தைப் பெற்றுக் கொள்கின்ற பட்டதாரிகள் இத்தகைய அனைத்து காரணங்களையும் குறிப்பிட்டு தமது மேன்முறையீட்டை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் -என்றார். (ந,இ)

---

## பிள்ளையானிடம் 5 மணி நேர வாக்கு மூலம்

கொழும்பு, செப்.4

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில், நாடாளுமன்ற உறுப்பினரான சிவநேசதுரை சந்திரகாந்தன் சுமார் 5 மணி நேரம் வாக்கு மூலம் பதிவுசெய்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காக நேற்றைய தினம் இந்த ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நேற்று முற்பகல் 9.45 மணி அளவில் இந்த ஆணைக்குழுவில் முன்னிலையானார்.

இந்த நிலையில், சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் சுமார் 5 மணி நேர வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவர், நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து, கொழும்புக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். (ற)

---

# 20 இல் சிலவற்றை ஏற்கவே முடியாது

## சுதந்திரக்கட்சி கூறுகிறது

கொழும்பு, செப்.4

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த தடையை, 20ஆவது திருத்தத்தின் ஊடாக நீக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலர் ரோஹண லக்ஸ்மன் பியதாச தெரிவித்துள்ளதாவது:

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் வாய்ப்பை உலகின் பல நாடுகள் தடுத்துள்ளன. புதிய அரசமைப்புத் திருத்தம் ஊடாக இலங்கையில் இந்த வாய்ப்பு ஏற்படுத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றார். (எ-இ)

---

## விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையானார் ஹக்கீம்

கொழும்பு, செப்.4

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் இன்று ஆஜரானார். இந்த வார தொடக்கத்தில், குண்டுவெடிப்பு தொடர்பான அறிக்கையை பதிவு ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு ஹக்கீமுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கிடையில், ரஞ்சித் மத்தும பண்டாரா இந்த வார தொடக்கத்தில் ஆணையத்துடன் மூன்று மணி நேர அறிக் கையை பதிவு செய்ய செய்திருந்தார். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பலர் கடந்த ஆண்டு தாக்குதல்கள் தொடர்பாக முன்னர் ஆணையத்தின் முன் அறிக்கைகளை பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

---



## ரணிலும் ஆணைக்குழுவில் முன்னிலை

கொழும்பு, செப்.4

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பதற்காக முன்னிலையாகியுள்ளார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி நிஹால் ஜெயதிலக ஆகியோர் வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே அவர் முன்னிலையாகியுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது. (வ-இ)

---

## பதியப்படாத நிலையில் 175 அரபு பாடசாலைகள்

கொழும்பு, செப்.4

இலங்கையில் 175 அரபு அறநெறி பாடசாலைகள் பதிவு செய்யப்படாத நிலையில் உள்ளன என்று முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் ஆதாம் மொஹமட் அஷ்ரப் தெரிவித்துள்ளார். ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று அரச சட்டத்தரணி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 317 அரபு அறநெறி பாடசாலைகள் உள்ளன என்றும் அஷ்ரப் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

---

## போதைப்பொருள் குற்றம்: கைதாவோர் அதிகரிப்பு

### ஆராய விசேட குழு

கொழும்பு, செப்.4

போதைப்பொருள் குற்றத்துடன் தொடர்புபட்ட கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புபட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. இதுதொடர்பில் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் தொடர்பில் ஆராய்வதற்கான கலந்துரையாடல் நீதி அமைச்சில் நேற்று இடம்பெற்றது. இதன்போது நீதி அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. நீதிஅமைச்சின் மேலதிக செயலாளர் பியுமந்தி பீரிஸ் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் குழுவில் இரசாயன பகுப்பாய்வு திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலை திணைக்களம் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆகிய நிறுவனங்களின் அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர். நீதி அமைச்சின் சட்ட ஆலோசகர்கள் இந்த குழுவின் ஆலோசகர்களாக செயற்படவுள்ளனர். போதைப்பொருள் குற்றத்தில் தொடர்புபட்ட கைதிகளை நீதிமன்ற உத்தரவில் புனர்வாழ்வளிப்பது தொடர்பிலும் சந்திப்பின்போது கலந்துந்துரையாடப்பட்டுள்ளது. (வ-இ)

# காலத்தை வீணடிக்காமல் தீர்வை பெறுவதே எனது அரசியல் பயணம்

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

ஹற்றன், செப்.4

பிரச்சினைகளைப் பேசிக் காலத்தை ஓட்டுவதைவிடவும், தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதை நோக்கமாகக்கொண்டதே எனது அரசியல் பயணம். அவ்வாறு தற்போது செயற்பட்டும் வருகின்றேன் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட ஹற்றன் புனிதஜோன் பொஸ்கோ கல்லூரியில், அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் கீழ் இரண்டு மாடிக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட இடைக்காலக் கணக்கறிக்கை மூலம் எனது அமைச்சுக்கு ஆயிரத்து 56 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் கடந்த நான்கரை வருடங்களில் கடன் அடிப்படையிலேயே மலையகத்தில் வேலைகள் நடந்துள்ளன. அவற்றை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. முதலில் அடிக்கல் நடவேண்டும், கட்டடத்தை நாமே திறந்து வைக்க வேண்டும் என்ற குறுகிய அரசியல் நோக்கில் திட்டங்களை உரிய வகையில் செய்யவில்லை. எங்களுக்கு அடிக்கல் நடுவது பிரச்சினை அல்ல. செய்யும் திட்டம் முறையாகவும், பயனாளர்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

பிரச்சினைகளைப் பேசிப், பேசி காலத்தை ஓட்டமுடியாது. கல்வி என்பது புத்தகப் படிப்பு மட்டும் அல்ல, அதனையும் தாண்டி பல விடயங்கள் உள்ளன. விளையாட்டு உட்பட பல் துறைகளில் மாணவர்களால் சாதிக்க முடியும்.

அதேபோல் அமைதி, அமைதி எனக்கூறி மாணவர்களை முடக்காமல், அவர்களுக்கு கேள்வி கேட்பதற்கான வாய்ப்புகளை ஆசிரியர்கள் வழங்கவேண்டும். அப்போதுதான் சிறந்த தலைவர்களை உருவாக்கமுடியும் - என்றார். (ப)

# கொலைக் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை

கொழும்பு, செப்.4

1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொஸ்லந்த மீரியபெத்த பகுதியில் 1995ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டிருந்தார்.

அந்த கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பல வருடங்களாக சிறையில் இருந்த நிலையில் அவரது வழக்கு தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை பதுளை மேல் நீதிமன்றம் அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மீரியபெத்த பகுதியைச் சேர்ந்த 52 வயதான நபருக்கே இவ்வாறு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# அரசாங்கத்தை விமர்சிக்கிறார் முருத்தெட்டுவே ஆனந்ததேரர்

கொழும்பு, செப்.4

இலங்கையில் வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கு பொருத்தமற்ற நபர்களையே அரசாங்கம் இதுவரை நியமித்துள்ளது என்று முருத்தெட்டுவே ஆனந்ததேரர் தெரிவித்துள்ளார்.

நாரஹன்பிட்டியில் அமைந்துள்ள அபயராம விகாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்களில் சிலர் தேவையான காலங்களில் காணப்படவில்லை. இதுபோன்ற முடிவுகளை எடுப்பதற்கு முன்பு அவர்கள் குறித்து ஒரு ஆய்வு செய்யப்பட வேண்டும். பல அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று மக்கள் கருத்தை கேட்பதில்லை. எனவே, தலைவர்களின் புகழைப் பாடத் தயாராக இல்லை. குறைகளை பொதுவில் சுட்டிக்காட்டுவதற்கு முன்வருவேனென்றார்.(ற,-இ)

# கடந்த 15 மாதங்களில் 2,480 போதை வழக்குகள்

கடந்த 15 மாதங்களில் 2 ஆயிரத்து 480 போதைப்பொருள் தொடர்பான வழக்குகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்துள்ளார். அத்துடன், இந்தக் காலப்பகுதியில் பாரதூரமான போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 2 ஆயிரம் வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார். போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 235 ஆக குறைவடைந்துள்ளதாக சட்டமா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ற,இ)



# சீரற்ற வானிலையால் 9 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு

கொழும்பு, செப்.4

இலங்கையில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாடளாவிய ரீதியில் 12 மாவட்டங்களில், இரண்டாயிரத்து 428 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 853 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். காலி மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்படி, காலி மாவட்டத்தில் ஆயிரத்து 671 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 166 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களினால் 33 வீடுகள் முழுமையாகவும், 555 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

இரண்டு இடைத்தங்கல் முகாம்களில், 99 குடும்பங்களைச் சேர்ந்த 325 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.(ற,இ)

# தமிழ் பேசும் பொலிஸாரை புத்தளத்தில் நியமியுங்கள்!

## அலி சப்ரி ரஹீம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, செப்.5

புத்தளம் மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் அதிகம் வாழும் நிலையில், தமிழ் மொழியில் பரீட்சயம் கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

புத்தளம் மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் அதிகமாக உள்ளனர். அவர்கள் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதிலும், ஏனைய கருமங்களைச் செய்வதிலும் சிங்கள மொழி தெரியாததால் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த விடயம் எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த விடயத்தை நான் உங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். தமிழ் மொழியில் பரீட்சயம் கொண்ட, முறைப்பாடுகளைப் பதிவு செய்யக் கூடிய, சரளமாக உரையாடக் கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன் என்றுள்ளது. (ற-இ)







# மாஸ்க் அணியாதவர் சவப்பெட்டிக்குள்

இந்தோனேசியாவில் முகக்கவசம் அணியாமல் வெளியே நடமாடிய நபருக்கு சவப்பெட்டியில் வைத்து கடுமையான தண்டனை வழங்கப்பட்டுள்ளது. கொரோனா கட்டுப்பாடுகளை மீறும் மக்களுக்கு இந்தோனேசியாவில் அபராதம் உள்ளிட்ட கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கட்டுப்பாட்டை மீறி முகக் கவசம் அணியாமல் தலைநகர் ஜகார்தாவில் வெளியே நடமாடிய நபருக்கு மாதிரி சவப் பெட்டியில் வைத்து கடுமையான தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (வ)

# ஜேர்மன் குடியிருப்பில் 5 குழந்தைகள் சடலமாக மீட்பு

பேர்லின், செப்.4

ஜேர்மனியில் அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றில் இருந்து ஐந்து குழந்தைகள் சடலமாக மீட்கப்பட்டுள்ளன. ஜேர்மனியின் சொலிங் கிங் நகரில் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குழந்தைகளின் தாய் அவர்களை கொலை செய்து தானும் உயிர்மாய்க்க முயற்சித்துள்ளார் என அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு குழந்தை மாத்திரம் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. ஒன்று முதல் எட்டு வயதுக் குட்பட்ட மூன்று பெண் குழந்தைகளும் இரண்டு ஆண் குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர். (வ)





ஆப்கானிஸ்தானில்

# கண்ணிவெடி வெடிப்பு: மூவர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானின் நங்கார்ஹர் மாகாணம் பச்சேர கம் மாவட்டத்தில் சாலையோரம் பயங்கரவாதிகளினால்புதைத்துவைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்துள்ளது.

நேற்றுக் காலை அப்பகுதி வழியாக பொதுமக்கள் நடந்து சென்றபோது திடீரென கண்ணிவெடி வெடித்துச்சிதறியது. இதில் 3 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார். கண்ணிவெடி தாக்குதல் குறித்து தகவல் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்துமீட்புபணியில்ஈடுபட்டனர். இந்தத்தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

6000 கறவைப் பசுக்களுடன்

# மூழ்கியது கப்பல்

43 ஊழியர்கள், 6000 கறவைப் பசுக்களுடன் ஜப்பான் கடற்பிராந்தியத்தில் சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கியுள்ளது. அந்தக் கப்பலில் இருந்த ஒருவர் ஜப்பான் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளார். மயசாக் சூறாவளி காரணமாக கல்ப் லைவ் ஸ்டொக் 1 எனும் கப்பல் காணாமற்போயுள்ளது. அந்தக் கப்பல் மூழ்குவதாக கிழக்கு சீனக் கடலிலிருந்து சமிக்ஞை அனுப்பப்பட்டுள்ளது. இதனையடுத்து, கப்பலைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காணாமற்போன கப்பல் ஊழியர்களில் பிலிப்பைன்ஸ், நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாட்டினர் அடங்கலாக 39 வெளிநாட்டவர்களும் இருந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)






# பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் மீள ஆரம்பம்

இஸ்லாமாபாத், செப்.4

சர்வதேச ரீதியில் ஏற்பட்ட கொரோனா அச்சுறுத்தல் காரணமாக கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் இடைநிறுத்தப்பட்ட நிலையில், எஞ்சிய போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எஞ்சியுள்ள 4 போட்டிகளையும், நவம்பர் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது.

போட்டிகளை நேரில் பார்ப்பதற்கு ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மேலும் அறிவித்துள்ளது. (ற)

# கால்பந்து அணியில் மூவருக்கு கொரோனா

பாரிஸ், செப்.4

பிரான்ஸின் முன்னணி கால்பந்து கழக அணியான பேரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியின் மூன்று வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய நட்சத்திர வீரர்களான நெய்மார், ஏஞ்சல் டி மரியா மற்றும் லியாண்ட்ரோ பரேடஸ் ஆகிய வீரர்களுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த வீரர்கள் சுற்றுலா சென்றிருந்த நிலையிலே தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் மூவரும் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 04.09.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.